திரு. வை. சங்கரன் : சட்ட சபை மெம்பர்கள் சம்பந்தப்பட்ட வரையிலாவது ஏஜ் குவாலிஃபிகேஷன், எஸ்.எஸ்.எல்.ஸி. குவாலிஃபிகேஷன் இவைகளைத் தளர்த்தி அவர்களை ஹோம் கார்டில் சேர்த்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றி பரிசீலனை செய்து சொல்லுகிறேன்.

திருத்துறைப்பூண்டி கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்கு

* 350 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி கோவாப்பரேடிவ் அர்பன் பாங்க் நிர்வாக ஊழல் குறித்து அண்மையில் அரசாங்கத்திற்குப் புகார் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) இது குறித்துப் புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : மகாசபைக் கூட்டம் நடத்தாமலேயே நிர்வாகம் நடத்துகிறார்கள் என்ற நிலையில், நிலம் அடமானம் வைத்து கடன் கேட்டு விண்ணப்பித்தும் கடன் கொடுக்கவில்லை என்ற புகார் வந்து, அந்தப் புகார் மேலேயே நான் நோட் எழுதி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறேன். அதை மறுபடியும் பரிசீலனை செய்து அந்தப் புகார்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஊழல் பற்றி கேட்டதற்கு ஊழல் இல்லை என்று பதில் சொன்னேன். ஒரு சில புகார்கள் வந்தன, அவைகளைப்பற்றி ரிஜிஸ்டிரார் அவர்கள் பரிசீலனை செய்து என்ன செய்யவேண்டும் என்று சில குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ மகா சபைக் கூட்டம் நடக்கவில்லை என்று கூறுகிறார்கள். மெம்பர்களுடைய 'பீரியட்' 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில்தான் முடிவடைகிறது. கனம் அங்கத்தினர் சொல்லுவது, ஏதோ அவர்கள் 'பீரியட்' முடிந்தும் அவர்கள் தலையிடுகிறார்கள் என்று புகார் சொல்லுகிறார்கள். 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அவர்கள் பதவி காலம் முடிவடைகிறது.

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

* 351 கேள்வி.—**திரு. கோ. சி. மணி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த ஐந்தாண்டுகளில் தஞ்சை மாவட்டக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கத்திற்கு (Thanjavur district Co-operative Marketing Society) லாப நஷ்டம் எவ்வளவு ?

(இ) மேற்படி சங்கத்திற்கு 1965-ம் ஆண்டில் நெல் கொள் முதல் செய்ததினால் கிடைத்த லாபம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு சப்ளை-மார்க்கெட்டிங் சங்கம் கடந்த ஐந்தாண்டுகளாகப் பின் கண்டவாறு நஷ்டத்திலேயே பணி யாற்றியது:—

	ரூ.
1960–61	3,87,994·72
1961–62	5,40,736.17
1962–63	6,63,408·76
1963–64	7,77,026·31
1964–65	கணக்குகள் முடிவாகவில்லை.

(இ) ஷை சங்கத்திற்கு 1965 ஜனவரியிலிருந்து ஜூன் வரை (ரூ. 8,380) ரூபாய் எட்டாயிரத்து முன்னூற்று எண்பது லாபம் கிடைத்துள்ளது.

திரு. கோ. சி. மணி: அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் நஷ்டம் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்று தெரிய வருகிறது. அப்படி நஷ்டம் வந்ததற்கு என்ன காரணம் என்பது பற்றி பரிசிலனை செய்து, அரசாங்கம் நேரடி யாக அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: முக்கிய மாக நஷ்டம் வந்ததற்குக் காரணம் 1960–61, 1961–62-ல் நெல் கொள்முதல் செய்தது ஒன்று.(மேலும் 'பர்டிலைஸர்ஸ்' வாங்கின வகையிலும் ஏற்பட்ட நஷ்டமும் அதில் சேர்ந்திருக்கிறது. இந்த நஷ்டம் 1961-62-ல் அதிகமாக ஆரம்பித்ததுதான் காரணம். ஆர்.ஸி.எஸ். அவர்கள் இப்பொழுது அதைப் பரிசிலனை செய்து என்ன செய்யவேண்டும் என்பதைக் கவனித்துக் கொண்டிருக் கிறார்கள்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, நெல்லையும், உரத்தை யும் கொள்முதல் செய்து, கொள்முதல் விலைக்கு குறைத்து விவசாயிகளுக்குக் கொடுத்ததனால் நஷ்டம் ஏற்பட்டதா அல்லது வாங்கி சேமித்து வைத்த வகையில் நஷ்டம் ஏற்பட்டதா அல்லது அதிகாரிகளுடைய நடவடிக்கைகளின் காரணமாக நஷ்டம் ஏற்பட்டதா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அதிகாரி களின் நடவடிக்கைகளினால், அவர்கள் தவறாக நடந்து கொண்ட தினால் நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்வதற்கில்லை. 1960-ல் 1,184 டன் மானோ அமோனியம் சல்பேட் வாங்கப்பட்டது. அது விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பெர்டிலைஸர் இல்லை என்ற காரணத் தினால், அந்த வருஷம் வாங்கினது ரூ. 5,14,000 மதிப்பு கொண்டது அதிகமாக விலை போகாமல் தேங்கி விட்டது. அதற்கு மேல் 'காப்பிட்டல் இன்டரஸ்டு, கோடவுன் ரெண்டு' இவைகளெல்லாம் சேர்ந்ததன் காரணமாக அந்த ஆண்டு பர்டிலைஸர் மூலமாக அந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

8th November 1965]

புலவர் கா. கோவிந்தன் : நெல் கொள்முதல் செய்து வியாபாரம் செய்ததினுலோ அல்லது உரம் கொள்முதல் செய்து வியாபாரம் செய்ததினுலோ அதிக நஷ்டம் வருவதற்கு நியாயம் இல்லை. தனியார் துறையில் செய்பவர்கள் லாபத்தோடுதான் செய்துகொண்டிருக்கிருர்கள். ஆகவே, இதிலே நிர்வாக ஊழல் மலிந்து இடையிலே பெருச்சாளிகள் புகுந்ததன் காரணமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஊழல்கள் இருந்து, தொடர்ந்து நஷ்டம் வந்திருக்கிற காரணத்தினுல், அவ்வப்பொழுது அரசாங்கம் தலையிட்டு நஷ்டத்தை தவிர்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : நெல்லைப் பொறுத்தவரையிலும் வாங்கின விலைக்கும் கீழே விலை விழுந்து விட்டதன் காரணமாகவும் நஷ்டம் ஏற்பட்டது. முன்பு பர்டிலைஸரைப் பொறுத்தும் சொன்னேன். புலவர் கோவிந்தன் அவர்களுக்கு விவசாயத்தில் அனுபவம் இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. அந்த ஆண்டிலே வரவழைக்கப்பட்ட பெர்டிலைஸர் மக்களுக்கு பிடிக்காத பர்டிலைஸராக இருந்ததினுலே அதை யாரும் வாங்க முன்வரவில்லை. அதே நேரத்திலே மற்றவர்கள் மக்கள் விரும்புகிற பர்டிலைஸரை வாங்கிக் கொடுத்து வந்தார்கள். மக்களுக்கு வேண்டுமென்ற பர்டிலைஸரை வாங்கிக் கொடுக்காத நிலைமையில் இந்த நஷ்டம் ஏற்பட்டது.

கனம் சபாநாயகர் : அந்தப் பெருச்சாளி நான்கு கால் பெருச்சாளியா அல்லது இரண்டு கால் பெருச்சாளியா என்பதை க்ளியர் பண்ணவில்லையே ? (சிரிப்பு)

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பெருச்சாளி பர்டிலைஸரைத் தின்றது.

திரு. மு. ப. அழகமுத்து : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாஜே அமோனியம் சல்பேட் எந்தெந்த சொஸைடிகளுக்கு சப்ளை செய்யப்பட்டது? தமிழ் நாட்டில் வேறு சொஸைட்டிகள் அதை வாங்கினவா ? அப்படியானுல் அந்த சொஸைடிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இது ஒன்றைப் பொறுத்துத்தான் இப்பொழுது விவரம் இருக்கிறது. மற்ற விவரங்கள் வேண்டுமானுல் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஒரு வருஷத்தில் நஷ்டம் ஏற்பட்டது என்ருலும் ஒப்புக்கொள்ளலாம். ஆனுல், வருஷா வருஷம் நஷ்டம் ஏற்க்கொண்டே வந்திருக்கிறது. மேலும் நஷ்டம் ஏற்படாமல் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ? டைரக்டர்கள் போர்டை கலைத்து ஸ்பெஷல் ஆபீசர் போடுவதற்கு அரசாங்கம் என் நடவடிக்கை எடுக்கவில்லை ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : கணக்கு என்று சொன்னவுடன் வருஷா வருஷம் இப்படி கணக்கு போடுகிருர்கள் என்று நினைக்கிறேன். 1960-61-ல் தான் அதிகமாக

[8th November 1965

நஷ்டம் ஆரம்பித்தது. அதிலிருந்து 1962-63-ல் 6 லட்சம், 1963-64-ல் 7 லட்சம் என்று ஜாஸ்தியாக இல்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த சொஸைடியின் பிராஞ்சிலே இரண்டு அதிகாரிகளை, அவர்கள் ஊழல் செய்திருக்கிறார்கள் என்று தெரிந்து ஸஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்பொழுது என்னிடம் இருக்கும் தகவலில் அந்த விவரம் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், மூலக் கேள்வியில் ஆண்டு ஒன்றுக்கு பிராஃபிட் அண்ட் லாஸ் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் கேட்டிருக்கிறார்கள். அமைச்சர் முதலிலே சொல்லும்போது வருஷத்திற்கு இவ்வளவு நஷ்டம் என்று சொன்னார்கள், கடைசியில் அத்தனையும் சேர்த்து ஏழு லட்சம் என்று சொல்கிறார்கள், இவற்றில் எந்தப் பதிலை நாங்கள் உண்மையானது என்று எடுத்துக்கொள்ளட்டும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : இப்பொழுது சொன்னதைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : சார், அமைச்சர் முதலில் கூறும்போது அந்தப் பிராந்தியத்திற்கு ஒவ்வாத அம்மோனியம் சல்பேட்டை வாங்கியதால் நஷ்டம் என்றார்கள். ஏன் அந்தப் பிராந்தியத்திற்கு வேண்டாத பொருளை வாங்கவேண்டும், வாங்கவேண்டிய அவசியம் என்ன, அந்தமாதிரி வாங்கிய அதிகாரிகள் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையா ? அப்படியானால் இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா ? என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அவர்களுக்குக் கொடுத்த அலாட்மெண்டுபடி 'மோனோ அம்மோனியம் பாஸ்ஃபேட்' வாங்கியிருக்கிறார்கள். மற்ற விவரங்கள் இப்பொழுது இல்லை, தனிக்கேள்வி போடவேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதிலில் ஃபெர்டிலைசர் நஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நெல் கொள்முதலில் எவ்வளவு நஷ்டம் என்று சொல்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : 1961-62-ல் இந்த சொசைட்டி 68,151 மூட்டை நெல் 1,40,000 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். விற்பனை செய்யும்போது . . .

'As it could not sell the paddy at a favourable price on account of unexpected fall in prices, it incurred a loss of Rs. 1.24 lakhs in the business during 1961–62. The society made a request to the Government to subsidise the above loss'.